Arimaa Nokku Journal
(UGC Care Group-I Journal)
ISSN: 2320-4842
Vol-18 No. 03 July-September 2024

# மலர்ப் பண்பாடு

**மு. ரேவதி**

முனைவர், தமிழ்த்துறை, உதவிப் பேராசிரியர்,

ஸ்ரீ இராமகிருஷ்ணா மகளிர் கலை

அறிவியல் கல்லூரி, கோவை – 44.

**ஆய்வுச்சுருக்கம்**

பண்டைய உலக நாகரிகத்திற்குப் பெயர் பெற்ற கிரேக்கர்கள், ரோமானியர்கள் தங்கள் வாழ்வில் மலர்களைப் பெருமளவில் பயன்படுத்தியுள்ளனர். அவர்களையெல்லாம் விட நாகரிகத்தில் முதலிடம் வகிப்பவர்கள் நம் பழந்தமிழர்கள் என்று கூறும் அளவிற்கு அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை முறையில் இயற்கை குறிப்பிடத் தகுந்த இடத்தினைக் கொண்டு விளங்குகின்றது. ஆராய்ந்து பார்த்தால் இயற்கையோடு இயைந்த வாழ்வினையே அக்காலத் தமிழர்கள் வாழ்ந்துள்ளனர். அவர்களின் அகம், புறம் என்னும் வாழ்வின் இரு நிலைகளிலும் நிலமும், மலர்களும் அதிக இடம் பிடித்துள்ளன என்பதினை விளக்கும்முகமாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

**திறவுச் சொற்கள்: இயற்கை, மலர்கள், அகம், புறம், பண்பாடு**

## முன்னுரை

இயற்கையோடு இயைந்த வாழ்வினை சங்ககால மக்கள் வாழ்ந்து வந்தனர். தமிழர் வாழ்க்கை முறையினை அகம், புறம் என்று இருவகையாகப் பிரிப்பர். இவற்றிற்குரிய திணைகளை வகுக்கும் போது அகத்திணைகளுக்குரிய முதல், கருப்பொருட்களைச் சுட்டும் போதும் இயற்கைப் பின்னணியிலேயே படைத்திருப்பதே இதற்குச் சான்றாகும். இவ்வியற்கைப் பின்னணியில் மலர்கள் குறிப்பிடத்தகுந்த இடத்தைப் பிடித்துள்ளன. ஆகையினால், சங்ககாலப் பண்பாட்டினை **'மலர்ப்பண்பாடு'** என்றே கூறத்துணியும் அளவிற்கு அதில் தரவுகள் நிரம்பியுள்ளன. இதனை, ஆராய்வதாகவே இக்கட்டுரை அமைகின்றது.

## நாவலந்தண்பொழில்

பழந்தமிழர்கள் தாம் வாழ்ந்த நிலப்பகுதியினை **"நாவலந்தண்பொழில்"** என்றே அழைத்தனர். தாம் வாழும் நிலத்தினைப் பொழிலாகக் கூறும் மரபு அன்று இருந்துள்ளது. இவ்வழக்கு அவர்களுக்கு இயற்கை மீதிருந்த அன்பினை எடுத்துக்காட்டுவதாக உள்ளது. செடி, கொடிகள் நிறைந்து, இழையும், தழையும், பூவும், காயும், கனியுமாகக் காணப்படும் சோலையாகவே அந்நிலப்பகுதியை தமிழர்கள் கருதிய பாங்கினை இதன் மூலம் அறிய முடிகின்றது. இதனை,

**“நாவலந் தண்பொழில்**

**வடபொழில் ஆயிடை…"** **(பரிபாடல்.5,7-8)**

**“நாவலந் தண் பொழில் வீவின்றி விளங்க"** **(பெரும்பாண்.465)**

என்னும் சான்றுகளால் அறியலாம்.

**மலர்களின் பருவங்கள்**

அரும்பு, நனை, முகை, மொக்குள், முகிழ், மொட்டு ஆகியவற்றை மலரின் இளமைப் பருவமாக அறிஞர்கள் கூறுவர். மலர், வீ, செம்மல் ஆகியவற்றை மலரின் முதுமைப் பருவமாகக் குறிப்பிடுவர்.

| | |
|---|---|
| **அரும்பு** | **அரும்பும் நிலை** |
| **நனை** | **அரும்பு வெளியில் நனையும் நிலை** |
| **முகை** | **நனை முத்தாகும் நிலை** |
| **மொக்குள்** | **நாற்றத்தின் உள்ளடக்க நிலை** |
| **முகிழ்** | **மணத்துடன் முகிழ்த்தல்** |
| **மொட்டு** | **கண்ணுக்குத் தெரியும் நிலை** |
| **போது** | **மொட்டு மலரும்போது காணப்படும் புடைநிலை** |
| **மலர்** | **மலரும் நிலை** |
| **பூ** | **பூத்த மலர்** |
| **வீ** | **உதிரும் பூ** |
| **பொதும்பர்** | **பூக்கள் பலவாக குலுங்கும் நிலை** |
| **பொம்மல்** | **உதிர்ந்து கிடக்கும் புதுப்பூக்கள்** |
| **செம்மல்** | **உதிர்ந்த பூ பழம்பூவாய் செந்நிறம் பெற்று அழுகும் நிலை** என்று |

மலர் அரும்பியது முதல் உதிர்வது வரையிலுமான நிலைகளின் பெயர்களை சங்க இலக்கியங்களில் பல இடங்களில் காணமுடிகின்றது.

**நிலம் - மலர்**

இயற்கை வாழ்வில் மரங்கள் இன்றியமையாதவை. அம்மரங்களின் பெருக்கத்திற்கு பெருந்துணை செய்வன மலர்கள் ஆகும். ஆதலால், இயற்கையோடு இயைந்த வாழ்வு வாழ்ந்த சங்க கால மக்கள் தாங்கள் வசிக்கும் நிலப்பகுதிகளுக்கும் மலர்களின் பெயர்களையே சூட்டினர்.

**முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்**

**சொல்லிய முறையார் சொல்லவும் படுமே"** **(தொல்.பொருள்.அகம் - 5)**

என்று நிலத்தின் பெயர்களை மலர்களின் பெயர்களால் அழைத்தனர்.

**பண்கள், யாழ்கள்**

**"தெய்வம் உணாவே மாமரம் புட்பறை செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ அவ்வகை பிறவும் கருவென மொழிப" (மேலது-20)** என்று கருப்பொருட்களைக் குறிப்பிடும் போது அந்தந்த நிலத்திற்குரிய மலர்களின் பெயர்களாலேயே அழைக்கப்படுகின்றன.

| | |
|---|---|
| **குறிஞ்சி** | **குறிஞ்சிப்பண், குறிஞ்சியாழ்** |
| **பாலை** | **பாலைப்பண், பாலையாழ்** |
| **முல்லை** | **முல்லைப்பண் முல்லையாழ்** |
| **மருதம்** | **மருதப்பண் மருதயாழ்** என்று அமைந்துள்ளன. |

**அக வாழ்வில் மலர்கள்**

சங்க இலக்கிய அகத்திணையில் மலர்களின் பயன்பாட்டினை, களவுக்காலம் கற்புக்காலம் ஆகிய இருநிலைகளிலும் அறியமுடிகிறது. திருமணத்தின் போது மணமக்களை நெல்லும், மலரும் தூவி வாழ்த்தி உள்ளனர். இதனை,

**"கற்பினின் வாழாஅ நற்பல வுதவிப்**
**பெற்றோற் பெட்கும் பிணையை ஆகென**
**நீரொடு சொரிந்த ஈரிதழ் அலரி**
**பல்லிருங் கதுப்பின் நெல்லொடு தயங்க**
**வதுவை நன்மணம்…." (அகம் - 86)**

என்ற சங்கப்பாடல் மூலம் உணர முடிகின்றது. மணமக்கள் தலையில் மலர்தூவி வாழ்த்தும் மரபினை இளங்கோவடிகளும் தன் சிலப்பதிகாரத்தில் பதிவு செய்துள்ளார். கோவலன் கண்ணகி திருமணத்தைக் குறிக்கும் பொழுது,

**“காதலற் பிரியாமல் கவவுக்கை ஞெகிழாமல்**
**தீதறுகென வேத்திச் சின் மலர் கொடு தூவி…” (சிலம்பு,1, 61 & 62)**

என்று மலரிட்டு வாழ்த்தியுள்ளதைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், சங்க கால மகளிர் திருமணத்திற்குமுன் தங்கள் கூந்தலில் மலர் சூட்டுவது இல்லை என்பதனையும் பின்வரும் பாடலால் அறிய முடிகின்றது. தலைவி, தலைவன் அளித்த மலரைக் கூந்தலில் சூடியுள்ளாள். அதனை மறந்து அன்னை முன்னர்க் கூந்தலுக்கு எண்ணெய்த் தடவ அமர்கின்றாள். கூந்தலின் உள்ளே இருந்த மலர் கீழே விழுகின்றது. நெருப்பைத் தொட்டவர்போல் அன்னை விதிர்விதிர்த்து அவ்விடம் விட்டு வெளியேறுகிறாள். இச்செய்தியினை,

**“புல்லினத்து ஆயர்மகன்சூடி வந்ததோர்**
**முல்லை ஒருகாழும் கண்ணியும் மெல்லியால்**
**கூந்தலுள் பெய்து முடித்தேன்மன் தோழியாய்**
**வெண்ணெய் உரைஇ விரித்த கதுப்போடே**

 ISSN: 2320-4842
Vol-18 No. 03 July-September 2024

**அன்னையும் அத்தனும் இல்லரா யாய்நாண**

**அன்னைமுன் வீழ்ந்தன்று அப்பூ**

**அதனை வினவலும் செய்யாள் சினவலும் செய்யாள்**

**நெருப்புக்கை தொட்டவர் போல விதிர்த்திட்டு**

**நீங்கிப் புறங்கடைப் போயினாள்."** **(கலி. 115, 4 -12)**

என்ற பாடல் அடிகள் விளக்குகின்றன. மணமாகாத மகளிர் கூந்தலில் பூச்சூடுவது இயல்பு என்றால் தாய் அதனைக் கண்டு வேறுவிதமான உணர்வு கொள்தற்கு வாய்ப்பு இல்லை என்பதனையும் இதன் மூலம் உணரலாம். **"பண்டைத் தமிழ்க்கன்னி மலர் சூடாள் என்பதும், மலர் சூடின் கன்னியாகாள், ஒருவனை வரித்தாள் என்பதும் நம் பழஞ் சமுதாய வழக்கு" என்று கூறுவார் பண்டாரகர் வ. சுப. மாணிக்கம் அவர்கள். (வ. சுப. மாணிக்கம், தமிழ்க்காதல், ப.159)**

சங்க காலத்தில் திருமணத்திற்கு பிறகே தலைவியின் கூந்தலில் மலர் சூடும் உரிமையைத் தலைவன் பெறுகிறான். தலைவனோடு இணைந்திருக்கும் போது தலைவி மலர் சூடிக் கொள்வாள். ஆனால், தலைவனைப் பிரிந்து இருக்கும் போது தலைவி மலர் சூடிக் கொள்ள மாட்டாள். இவ்வாறு அக வாழ்க்கையோடு இயைந்த நிலையில் மலர்கள் குறிப்பிடத்தகுந்த இடம் வகித்துள்ளன.

**புற வாழ்வில் மலர்கள்**

புறத்திணையில் போருக்குச் செல்லும் முன் போர்ப்பூ வழங்கல், போரின் போது பூச்சூடல், மன்னர்க்குரிய அடையாளப்பூ, மன்னர்கள் தங்கத்தால் ஆன பூவைப் பரிசாக வழங்குதல் என்று புற வாழ்க்கை முழுவதும் மலரின் மணம் வீசுகின்றது. வெட்சி, கரந்தை, வஞ்சி, உழிஞை, தும்பை, வாகை, காஞ்சி என்ற புறப்பாகுப்பாட்டில் மலர்களின் பெயர்களே இடம் பெற்றுள்ளன. மேலும், மன்னர்களுக்கு உரிய அடையாளத்தில் சேரன் பனம்பூவையும், பாண்டியன் வேப்பம்பூவையும், சோழன் ஆத்திப்பூவையும் சூடியிருப்பான் என்று. கூறப்படுகின்றது.

போர்க்காலங்களில் மகளிர் பூ அணிந்து பொலியாமல் வருந்தினர் என்பதினைப் பின்வரும் பாடலால் அறிய முடிகின்றது. **"பூவில் வறுந்தலை முடிப்ப..." (புறம்,44,7)** கணவனைப் பிரிந்து வாழும் தனிப்படர்மிகுந்த நிலையிலும் பூச்சூடிக் கொள்ளாமல் வாளா விருந்தனர். எனவே, பூவெனப்படுவது மகிழ்ச்சிக் காலங்களில் இன்பத்தை மிகுவிக்கும் மங்கலப் பொருளாயிற்று. ஒல்லையூர்கிழான் மகன் பெருஞ்சாத்தன் இறந்தபோது, குடவாயிற் கீரத்தனார் பாடிய கையறு நிலைப் பாடலும் இங்கு எண்ணத்தக்கது.

**"இளையோர் சூடார், வளையோர் கொய்யார்,**

**நல்லியாக் மருப்பின் மெல்ல வாங்கிப்**

**பாணன் சூடான், பாடினி அணியாள்,**

**ஆண்மை தோன்ற ஆடவர்க் கடந்த**

**வல்வேற் சாத்தன் மாய்ந்த பின்றை**

**முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாட்டே?"** **(மேலது, 242)**

இக்கையறுநிலைப்பாடல் மூலம் தமிழர்களின் துன்பம் மிகுந்த காலத்திலும் மலர்கள் பெரும்பங்காற்றியுள்ளதையும் அறிய முடிகின்றது. இவ்வாறு பழந்தமிழர்களின் புற வாழ்விலும் மலர்கள் குறிப்பிடத்தகுந்த இடம் வகித்துள்ளன.

**மலரும், கவிஞர்களும்**

காதலைக் குறிக்க வந்த திருவள்ளுவர் 'மலரினும் மெல்லிது காமம்' என்றார். விருந்தினரை ஓம்ப வேண்டிய பான்மையினைக் குறிப்பிடும் பொழுதும், 'மோப்பக் குழையும் அனிச்சம்' என்று மலரையே உவமித்துக் காட்டினார். மகளிர் உறுப்புநலனை வருணிக்கும் கவிஞர்களும், 'தாமரை போன்ற முகம்' என்றும், 'குவளை மலர் போன்ற கண்கள்' என்றும், 'எட் பூ நாசி' என்றும், 'முருக்க மலர் போன்ற இதழ்கள்' என்றும், 'குமுத மலர் போன்ற வாய்' என்றும், 'வாழைப் பூப் போன்ற கூந்தல்' என்றும், 'காந்தள் போன்ற கைகள்' என்றும், 'நொச்சி மலர் போன்ற அடிகள்' என்றும் மலர்களுடன் ஒப்பிட்டே மங்கையர் எழிலைப் பாராட்டியிருக்கின்றனர். இவ்வாறு பழந்தமிழ் இலக்கியங்கலைப் படிக்கும்போது மலர்கள் தமிழர்கள் வாழ்வில் பெற்ற சிறப்பினை உணர முடிகின்றது.

**முடிவுரை**

**'எங்கும் மலர் எதிலும் மலர்'** என்றே சங்க கால மக்கள் தங்கள் வாழ்வினை வாழ்ந்துள்ளனர். இன்றைய நவீன உலகில் தலையில் மலர் சூடுவதையே நாகரிகமற்ற செயலாக இன்றைய இளம் பெண்கள் கருதுகின்றனர். மலர் என்றாலே மணம், அழகு, விருப்பம், மங்கலம், மென்மை என்பனவே நினைவிற்கு வரும். இவ்வாறான தன்மைகள் கொண்ட மலர்ப்பண்பாட்டினை நவீன உலகிற்கு மீட்டுருவாக்கம் செய்து தர முடியாவிட்டாலும் நம் பண்பாடு மணமற்ற காகிதப்பூப் பண்பாடாக மாறாமல் காப்பற்ற நம்மால் முடிந்த முயற்சியினை எடுக்க வேண்டும் என்பதே இக்கட்டுரையின் மூலம் நாம் அறிந்து கொள்ள வேண்டிய உண்மையாகும்.

**பயன்பட்ட நூல்கள்:**

1. **அகநானூறு, முதற்பதிப்பு, 2012, வர்த்தமானன் பதிப்பகம், 21 இராமகிருஷ்ணா தெரு, தியாகராயா நகர், சென்னை – 600 017.**
2. **புறநானூறு, முதற்பதிப்பு, 2012, வர்த்தமானன் பதிப்பகம், 21 இராமகிருஷ்ணா தெரு, தியாகராயா நகர், சென்னை – 600 017.**
3. **பரிபாடல், முதற்பதிப்பு, 2012, வர்த்தமானன் பதிப்பகம், 21 இராமகிருஷ்ணா தெரு, தியாகராயா நகர், சென்னை – 600 017.**

ISSN: 2320-4842
Vol-18 No. 03 July-September 2024

4. பெரும்பானாற்றுப்படை, முதற்பதிப்பு, 2012, வர்த்தமானன் பதிப்பகம், 21 இராமகிருஷ்ணா தெரு, தியாகராயா நகர், சென்னை – 600 017.
5. கலித்தொகை, முதற்பதிப்பு, 2012, வர்த்தமானன் பதிப்பகம், 21 இராமகிருஷ்ணா தெரு, தியாகராயா நகர், சென்னை – 600 017.
6. தொல்காப்பியம், கழக வெளியீடு
7. சரவணன்.ப (உ.ஆ), சிலப்பதிகாரம் மூலமும் உரையும், முதற் பதிப்பு 2008, சந்தியா பதிப்பகம், நியூடெக் வைபவ், 57-53 வது தெரு, அசோக் நகர், சென்னை - 600 083.
8. வ.சுப. மாணிக்கம், 2021, தமிழ்க்காதல், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை.